ஊராட்சி மன்றத் தலைவர், கோனேரிக்குப்பம் ஊராட்சி
காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை - திருமதி. S.சைலஜா.,

ந.க.எண்.627/2023 நாள். .02.2023

பொருள் - அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017 - காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் - கோனேரிக்குப்பம் ஊராட்சி / அ கிராமம் - சர்வே எண்.169/2-ன் மொத்த பரப்பளவு 0.77.00 உேறக்டேர் (அ) 7300 ச.மீ அமைந்துள்ள பெயரிடப்படாத குடியிருப்பு வீட்டுமனைபிரிவு (Lay Out) வரைபடத்திற்கு ம.வ./ந.ஊ.து.இ.(காஉதிகு).எண்.132/ 2022 என எண்ணிடப்பட்டு அங்கீகாரம் அளித்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து வீட்டு மனைகள் விற்பனை செய்ய கோனேரிக்குப்பம் கிராம ஊராட்சியின் இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடுதல்.

பார்வை -
1. துணை இயக்குநர்(பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், காஞ்சிபுரம் அவர்களின் கடித ந.க.எண். 584/2022/கா.மா.3, நாள்.30.12.2022
2. மனுதாரர் திரு. M.Munnalal & M.Dhilipkumar, No.109.Raja Veethi, Walajabad, Kanchipuram

******

உத்தரவு :-

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், கோனேரிக்குப்பம் ஊராட்சி / அ கிராமம், சர்வே எண்.169/2-ன் மொத்த பரப்பளவு 0.77.00 உேறக்டேர் (அ) 7300 ச.மீ அமைந்துள்ள அமைந்துள்ள பெயரிடப்படாத குடியிருப்பு மனைப்பிரிவிற்கான சாலைகள் மற்றும் பூங்கா அமைப்பு வரைபடம் பார்வை 1-ல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்/உறுப்பினர் செயலர் காஞ்சிபுரம் அவர்களின் கடிதத்தின் வாயிலாக பெறப்பட்ட வரைபடத்தில் (Blue Print)தெரிவித்துள்ளபடி, சாலைகள் மற்றும் மூலை முடக்குகள், பொது உபயோகம் மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) பகிர்மான கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட இடங்கள் கோனேரிக்குப்பம் கிராம ஊராட்சியின் பெயரில் பத்திர பதிவு செய்யப்பட்டு தான பத்திரம் எண்.2581/2022 நாள்.30.06.2022-ன்படி பெறப்பட்டுள்ளது.

மேற்படி அதனை தொடர்ந்து பார்வை 1-ல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்/உறுப்பினர் செயலர் காஞ்சிபுரம் அவர்களின் கடிதத்தில் தொழில் நுட்ப ஒப்புதல் (Technical Santion) வழங்கப்பட்ட இம்மனைபிரிவு வரைபடத்திற்கு ம.வ./ ந.ஊ.து.இ.(காஉதிகு).எண்.132/2022 என எண்ணிடப்பட்டு அங்கீகாரம் அளிக்கபட்டு உள்ளதாலும், கிராம ஊராட்சி வளர்ச்சி கட்டணம் பெறப்பட்டுள்ளதாலும், மேற்படி பெயரிடப்படாத மனைப்பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மனைகள் எண்ணிக்கை 35 வீட்டு மனைகள் விற்பனை செய்ய கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு கோனேரிக்குப்பம் கிராம ஊராட்சியின் இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது.

மேற்படி கிராம ஊராட்சி வளர்ச்சி கட்டணம் மனை ஒன்றுக்கு கூராய்வு கட்டணம் ரூ.1,000/- வீதம் வரைபடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள **35** மனைகளுக்கு 35 X 1000 = 35,000/- (ரூபாய் முப்பத்தைந்தாமிரம்) மற்றும் கொடி நாள் நிதி 17,500/- (ரூபாய் பதினேழாமிரத்து ஐந்நூறு) ஆக மொத்தம் **ரூ.52,500/-** (ரூபாய் ஐம்பத்து இரண்டாமிரத்து ஐந்நூறு மட்டும்) கோனேரிக்குப்பம் ஊராட்சியில் செலுத்துமாறு மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது.

S. Shyleti

ஊராட்சி மன்றத் தலைவர்
கோனேரிக்குப்பம் ஊராட்சி
காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம்.

பெறுநர்

M.Munnalal & M.Dhilipkumar,
No.109.Raja Veethi,
Walajabad Town, Kanchipuram.